**செய்தி வெளியீடு எண்: 343** **நாள் : 14.07.2016**

தமிழ்நாடு வரலாற்றில் எக்காலத்திலும் இதுவரையில்லாத அளவிற்கு தமிழுக்கும் தமிழ் வளர்ச்சிக்கும் பாடுபடும் தமிழறிஞர்களுக்கும் எழுத்தாளர்களுக்கும் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எண்ணற்ற விருதுகளும் பரிசுப் பாராட்டுச் சான்றுகளும், நலத்திட்டங்களும் வழங்கிச் சிறப்பித்து வருகிறார்கள். மேலும் வரலாற்றுச் சாதனையாகத் தமிழ்ப்புத்தாண்டை சித்திரையில் மீட்டெடுத்து அரசின் விழாவாக ஆண்டுதோறும் சித்திரையில் நடத்திட மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டார்கள். அதனடிப்படையில் விழாவும், விருதுகள் வழங்குதலும் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. இவ்வாண்டு (2016) கீழ்க்காணும் சித்திரைத் தமிழ்ப்புத்தாண்டு விருதுகள் வழங்கப்பட உள்ளன. இவ்விருதுகளுக்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. விண்ணப்பப் படிவம் தமிழ் வளர்ச்சித் துறையின் tamilvalarchithurai.com என்ற வலைத்தளத்தில் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். விண்ணப்பிப்பவர்கள் தன்விவரக் குறிப்புகளுடன் நிழற்படம்(2), எழுதிய நூல்கள் விவரத்துடன் அந்நூல்களில் ஒருபடி வீதம் கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு 05.08.2016 ஆம் நாளுக்குள் கிடைக்கும் வகையில் அனுப்ப வேண்டும்.

1. கபிலர் விருது (மரபுச் செய்யுள் / கவிதைப் படைப்புகளை புனைந்து வழங்குபவருக்கு)
2. உ.வே.சா.விருது (கல்வெட்டுகள், அகழாய்வு, ஓலைச்சுவடிகள் பதிப்பு ஆகியவற்றை மேற்கொள்பவருக்கு)
3. கம்பர் விருது ( கம்பரைப் பற்றித் திறனாய்வு செய்வோருக்கு)
4. சொல்லின் செல்வர் விருது ( சிறந்த இலக்கியப் பேச்சாளருக்கு)
5. உமறுப்புலவர் விருது ( தமிழுக்கும் தமிழ் இலக்கியத்திற்கும் தொண்டாற்றிவருபவருக்கு)
6. ஜி.யு.போப் (தமிழ் இலக்கியங்களை அயலக மொழிகளில் மொழிபெயர்க்கும் மொழிபெயர்ப்பாளருக்கு)
7. இளங்கோவடிகள்(இளங்கோவடிகளின் நடையையொட்டி புதிய காப்பியம் படைப்பவருக்கோ/ சிலப்பதிகாரத்தின் புகழ் பரப்புபவருக்கோ)
8. அம்மா இலக்கிய விருது ( மகளிர் இலக்கியங்களைப் படைப்பதில் தம்மை முழுமையாக ஈடுபடுத்தித் தொண்டாற்றிவரும் பெண் படைப்பாளர்)
9. தமிழ்த்தாய் விருது ( சிறந்த தமிழ் அமைப்புகளுக்கானது)

முகவரி

தமிழ் வளர்ச்சி இயக்குநர்,
தமிழ் வளர்ச்சி இயக்ககம்,
தமிழ் வளர்ச்சி வளாகம், முதல் தளம்,
தமிழ்ச் சாலை, எழும்பூர்,
சென்னை–600 008.
தொ.பே.எண். 044 28190412
044 28190413
மின்னஞ்சல் முகவரி: tamilvalarchithurai@gmail.com

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**